முழுப் பதிப்புரிமையுடையது.

## இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் II பரீட்சை – 2023 யூலை

# (204) வணிக முகாமைத்துவம்

(Business Management)

2023-08-20
பிற்பகல்
[01.45 – 05.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்)**:**

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*

பக்கங்கள் : 07
வினாக்கள் : 07

(2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *வழங்கப்பட்டுள்ள* ***விடைப் புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த* ***மொழி மூலத்திலேயே விடைகள்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *ஏதாவது எடுகோள்களை நீங்கள் மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப் பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(6) *100 புள்ளிகள்*

---

## பகுதி A

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 01

*இல.* ***1.1*** *தொடக்கம்* ***1.5*** *வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்யப்பட்ட விடையின் இலக்கத்தை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப் புத்தகத்தில் எழுதுக*

**1.1** குறிப்பிட்ட நேரமொன்றிலுள்ள உள்ளீட்டிற்கும் வெளியீட்டிற்கும் இடையிலான தொடர்பு:

(1) பயனுறுதித்தன்மை (2) வினைத்திறன்.
(3) உற்பத்தித்திறன். (4) முகாமை.

**1.2** கீழ்வருவனவற்றுள் பாரம்பரிய (மேலைத்தேய) முகாமைத்துவப் பாணியின் ஒரு பண்பாக (characteristic) அமைவது எது?

(1) வாடிக்கையாளர் திருப்தி. (2) மனிதத் தேவை நோக்கு.
(3) அதிகரித்த பெறுமதி சேர்ப்பு. (4) பங்குதாரர் திருப்தி.

**1.3** கீழ்வருவனவற்றுள் சிறந்த தந்திரோபாயம் ஒன்றின் பண்பாக இருப்பது எது?

(1) நவீனத்துவம். (2) புத்திசாதுரியம். (3) செலவுச் சிக்கனம். (4) மேற்கூறிய யாவும்.

**1.4** கீழ்வருவனவற்றுள் ஹென்றி பயோலின் கூற்றிற்கிணங்க, பாரம்பரிய நிறுவனக் கோட்பாட்டின் ஒரு முகாமைத்துவக் கோட்பாடாக **அமையாதது** எது?

(1) சிறப்புத்தேர்ச்சி. (2) கட்டளைகளின் ஓரினத்தன்மை.

(3) ஒருமுகப்படுத்தல். (4) தொழிற் பிரிப்பு.

**1.5** மொத்தத் தர முகாமைத்துவம் (TQM) தொடர்பான கீழ்வரும் கூற்றுகள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன:

**(a)** ஒருங்கிணைந்த முறைமை என்பது TQM இன் ஒரு கோட்பாடாகும்.

**(b)** இது ஒட்டுமொத்த நிறுவன முகாமைக்குமான ஒரு கட்டமைப்புசார் அணுகுமுறை ஆகும்.

**(c)** TQM இற்கு தொடர்ச்சியான மேம்படுத்தல்கள் தேவையில்லை.

மேலுள்ளவற்றுள், TQM தொடர்பில் சரியான கூற்றுக்களாவன:

(1) **(a)** யும் **(b)** யும் மாத்திரம். (2) **(a)** யும் **(c)** யும் மாத்திரம்.

(3) **(b)** யும் **(c)** யும் மாத்திரம். (4) மேற்கூறிய யாவும்.

(02 புள்ளிகள் வீதம், 10 புள்ளிகள்)

*வினா இல.* **1.6** *தொடக்கம்* **1.10** *வரை உள்ள இடைவெளிகளை நிரப்புவதற்கு, அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ள சொல் / சொற்களைத் தேர்ந்தெடுக்கவும். வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட சொல் / சொற்களை உங்கள் விடைப் புத்தகத்தில் எழுதவும்.*

**1.6** …………….. *(குறுங்கால வேலை / படிநிலை [Hierarchy])* என்பது அதிகாரவியலின் ஒரு பண்பாகும்.

**1.7** …………….. *(தொழினுட்பத் திறன்கள் / எண்ணக்கருசார் திறன்கள்)* என்பது குறிப்பிட்ட பணிகளைச் செய்வதற்குத் தேவையான ஆற்றல்களும் அறிவும் ஆகும்.

**1.8** முகாமைத்துவத் தொழிற்பாடு என்ற வகையில், …………….. *(திட்டமிடல் / வழிநடத்தல்)* ஆனது நிறுவனத்திற்கான எதிர்கால வழிநடத்தலை வழங்குவதுடன் நிச்சயமற்ற அச்சுறுத்தல்களையும் குறைக்கிறது.

**1.9** …………….. *(சந்தைப்படுத்தல் / உற்பத்தி)* எண்ணக்கருவில், நுகர்வோரின் தேவைகளும் விருப்பங்களும் கவனத்திற் கொள்ளப்படுகின்றன.

**1.10** …………….. *(நிலைமாறல் மாற்றம் / படிமுறை மாற்றம்)* என்பது நிறுவனத்தின் கட்டமைப்பு மற்றும் செயன்முறைகளை முழுமையாகத் திருத்தம் செய்வதுடன் தொடர்புடைய நிறுவன மாற்றத்தைக் குறிக்கிறது.

(01 புள்ளி வீதம், 05 புள்ளிகள்)

*இல.* **1.11** *தொடக்கம்* **1.15** *வரையான வினாக்களுக்கான குறுகிய விடைகளை, உமது விடைப் புத்தகத்தில் வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதற்கு எதிரே எழுதவும்.*

**1.11** "பண்டக்குறி (brand)" என்பதால் கருதப்படுவது யாதெனச் சுருக்கமாக விபரிக்குக.

**1.12** நிறுவனமொன்றின் வேலை வடிவமைப்புக்குப் பயன்படுத்தப்படும் இரண்டு (02) நுட்பங்களை (techniques) குறிப்பிடுக.

**1.13** வழங்கல் சங்கிலியின் இரண்டு (02) பிரதான கூறுகளை (key elements) குறிப்பிடுக.

**1.14** ஹென்றி மின்ஸ்பேக்கின் கூற்றுப்படி முகாமையாளர் ஒருவருக்குத் தேவையான இரண்டு (02) தகவல்சார் வகிபாகங்களை (informational roles) பட்டியலிடுக.

**1.15** "சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்" என்பதால் கருதப்படுவது யாதென விபரிக்குக.

(02 புள்ளிகள் வீதம், 10 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# பகுதி B

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 02

தற்காலச் சூழலில், தொழில்சார் வல்லுநர்களின் வெளியேற்றமானது இலங்கையின் பெரும்பாலான தொழில்துறைகளில் பற்றியெரியும் பிரச்சினை ஒன்றாக மாறிவருகிறது. ஊழியர்களை ஈர்த்தெடுத்தல், தக்கவைத்தல் மற்றும் ஊக்கப்படுத்தல் என்பன நிறுவனத்தின் முகாமையாளர்களுக்கு சவால்மிகுந்த பணியாக இருக்கிறது. மாற்றமடையும் வணிகச் சூழலானது முகாமையாளர்கள் நிறுவன வெற்றியை அடைவதற்கான நடைமுறைசார் முகாமைத்துவ அணுகுமுறைகளைப் பின்பற்றுவதற்கு ஊக்குவிக்கின்றன.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) ஆபிரஹாம் மாஸ்லோ என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்ட தேவைப் படிநிலையை (Hierarchy of Needs) ஒவ்வொரு தேவை மட்டங்களுக்கும் பொருத்தமான உதாரணங்களுடன் **விபரிக்குக.**

(06 புள்ளிகள்)

(b) எந்தவொரு நிறுவனத்திற்கும் ஊக்கப்படுத்தல் ஏன் ஒரு முக்கியமான காரணியாக இருக்கிறது என்பதற்கான இரண்டு (02) காரணங்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

முகாமையாளர் என்ற வகையில் உங்களது தொழிலை முன்னேற்றுவதற்கு, புத்திசாதுரியமாக தீர்மானமெடுப்பதற்கான மற்றும் எதிர்காலத்தை கற்பனை செய்வதற்கான உங்கள் திறன்கள் மிகவும் முக்கியமானதாகும். ஒரு சிறந்த முகாமையாளர், முன்னரே திட்டமிடப்பட்ட இலக்குகளை வினைத் திறனாகவும் பயனுறுதிமிக்க வகையிலும் நிறைவேற்றிக்கொள்வதை நோக்கி தனக்குக் கீழ் பணியாற்று பவர்களை வழிநடத்துகிறார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) புத்திசாதுரியமான தீர்மானமெடுத்தலைப் பின்தொடரும்போது முகாமையாளர்கள் எதிர்கொள்ளும் நான்கு (04) தடைகளைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(b) நவீன தலைவர் ஒருவரின் வெற்றியைத் தீர்மானிக்கின்ற நான்கு (04) தலைமைத்துவ சிறப்புக் காரணிகளை (excellency factors) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

நவீன உலகளாவிய பொருளாதாரத்தில் நாடுகளும் நிறுவனங்களும் பல்வேறு வகையான இணையத் தளங்கள் மற்றும் பிற மாற்றுப் பொறிமுறைகள் ஊடாக மெய்நிகராக இணைக்கப்படுவதால் பாரம்பரிய நிறுவனக் கட்டமைப்புகள் சவாலுக்குள்ளாகின்றன. இது நாடுகள் மற்றும் பிராந்தியங்களுக்கிடையில் நிறுவனங்கள் தத்தமது செயற்பாடுகள் மற்றும் சந்தைப்படுத்தல் உள்ளிட்ட வணிகத் தொழிற்பாடுகளின் நோக்கெல்லையை விரிவுபடுத்துவதற்கு உதவுகின்றன.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) நிறுவனக் கட்டமைப்பை வடிவமைப்பதில் தாக்கம் செலுத்தும் நடைமுறைக் காரணிகள் மூன்றைக் (03) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) ஹோட்டல் ஒன்றின் செயற்பாட்டு முகாமைத்துவச் செயன்முறையிலுள்ள கீழ்வரும் முன் - திட்டமிடல் நடவடிக்கைகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு உதாரணம் வீதம் **குறிப்பிடுக**:

(i) வழங்கல் சங்கிலி முகாமைத்துவம். (ii) கொள்ளளவுத் திட்டமிடல்.

(iii) தளவமைப்புத் திட்டமிடல். (iv) தர முகாமைத்துவம். (04 புள்ளிகள்)

(c) வணிகச் செயற்பாடுகளில் "கட்டச்சங்கிலி தொழினுட்பத்தை" பயன்படுத்துவதால் ஏற்படும் மூன்று (03) அனுகூலங்களைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

பல வகையான ஊழியர் வேலைப்படைகளுக்கு மத்தியிலான தொடர்பாடல் என்பது எந்தவொரு மனித வள முகாமையாளருக்கும் உள்ள ஒரு பொதுவான பணியாகும். ஒவ்வொரு ஊழியரிடமிருந்தும் நிறுவனச் செயன்முறைகளை நோக்கிய உகந்த பங்களிப்பு பெற்றுக் கொள்ளப்படுவதை உறுதி செய்வதற்கு, முகாமையாளர்கள் நிறுவனத்தினுள் இருக்கின்ற மனித வளங்களை மூலோபாய ரீதியில் கட்டுப்படுத்துவது அவசியமாகும்.

**வரையறுக்கப்பட்ட ABC கம்பனியானது** இதுவரை தனது ஊழியர்களின் வரவைக் கண்காணிக்காததால் ஊழியர்களிடமிருந்து உகந்த பங்களிப்பை பெற்றுக் கொள்வதற்கான கட்டுப்பாட்டுப் பொறிமுறை ஒன்றாக அதன் ஊழியர்களுக்கு கைரேகைப் பதிவு அடிப்படையிலான வரவுக் கண்கணிப்பு பொறிமுறையொன்றை அறிமுகப்படுத்தவுள்ளது.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) வணிக நிறுவனமொன்றுக்கு கீழ்நோக்கிய தொடர்பாடல் தேவைப்படுவதற்கான இரண்டு (02) நோக்கங்களைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) செயலாற்றுகை மதிப்பீட்டின் செயன்முறையை (படிமுறைகளை) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(c) **வரையறுக்கப்பட்ட ABC கம்பனி** கைரேகைப் பதிவு இயந்திரத்தை அறிமுகப்படுத்துவதன் காரணமாக ஊழியர்கள் வெளிக்காட்டும் இரண்டு (02) சாத்தியமான நடத்தைசார் விளைவுகளைக் (behavioral implications) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

தற்போது, வணிக உலகானது மிகவும் போட்டி நிறைந்ததாக மாறிவருகிறது. எனவே, போட்டியில் வெற்றி பெறுவதற்கு எந்த வகையான நிறுவனத்திற்கும் தனித்துவமான தந்திரோபாயங்கள் தேவையானதாக இருக்கின்றன. நிறுவனங்கள் தமது உற்பத்திப் பொருள்களை நிலைநிறுத்துவதற்கு வணிகங்களைச் செய்யும் வழிமுறைகளை மாற்றுவது அவசியமானதாகும்.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) மைக்கேல் போட்டரின் கூற்றிற்கிணங்க, சந்தையில் நிலைநிறுத்தப் பயன்படுத்தப்படும் இரண்டு (02) பொதுவான போட்டித் தந்திரோபாயங்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) ஊழியர்கள் பொதுவாக ஒரு நிறுவனத்தின் புதிய முயற்சிகளை ஏன் எதிர்க்கிறார்கள் என்பதற்கான இரண்டு (02) காரணங்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(c) Ansoff's Matrix இன்படி, தந்திரோபாயத் தெரிவுகளின் இரண்டு (02) வகைகளைக் **குறிப்பிடுக.**

(02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 07

இலங்கை முன்னெப்போதும் அனுபவித்திராக மோசமான பொருளாதார நெருக்கடியை தற்போது அனுபவித்து வருகிறது. சாதகமற்ற சுற்றுச்சூழல் மாற்றங்களால் பெரும்பாலும் அனைத்து தொழில் துறைகளும் சவாலுக்கு உள்ளாகியிருக்கின்றன. மேற்கூறிய மாற்றங்கள் காரணமாக பல வணிக நிறுவனங்களின் வணிக நடவடிக்கைகளின் தொடர்ச்சித்தன்மை கடுமையாக பாதிக்கப்படக்கூடியதாக இருக்கின்றது.

**வரையறுக்கப்பட்ட XYZ கம்பனி** மோசமான ஊழியர் மனவுறுதி மற்றும் வழிகாட்டல் இன்மையுடன் போராடி வருகிறது. புதிதாக நியமிக்கப்பட்ட பிரதம நிறைவேற்று அதிகாரி (CEO) கம்பனியை மாற்றியமைப்பதற்கான வலுவான தலைமைத்துவத்தின் தேவையை உணர்ந்து கொண்டார். அவர் கம்பனியின் எதிர்காலத்திற்கான தெளிவான ஒரு பார்வையுடன், வெளிப்படைத்தன்மை மற்றும் திறந்த தொடர்பாடலுக்கான அர்ப்பணிப்பைக் கொண்ட ஒரு புதிய நிறைவேற்று அணியை (executive team) நியமித்தார். இந்தப் புதிய தலைமைத்துவ அணியானது ஊழியர்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்பு வதிலும் அவர்களுக்கு அதிகாரமளிப்பதிலும் தனது கவனத்தைச் செலுத்தியது. ஓர் ஆண்டிற்குள், கம்பனியானது ஊழியர் ஈடுபாடு மற்றும் உற்பத்தித்திறனில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டது.

**வரையறுக்கப்பட்ட XYZ கம்பனியின்** CEO, கம்பனியின் வெற்றிக்கு ஊக்கமளிக்கப்பட்ட ஊழியர்கள் அவசியம் என்பதை உணர்ந்து கொண்டார். கடினமாக உழைத்து, கம்பனியின் வெற்றிக்கு பெரிதும் பங்களிப்புச் செய்யும் ஊழியர்களை அங்கீகரித்து, வெகுமதி அளிக்கும் நிகழ்ச்சித் திட்டமொன்றை அவர் நடைமுறைப்படுத்தினார். மேலதிகமாக, அவர் தொழில்சார் அபிவிருத்தி மற்றும் தொழில் வளர்ச்சிக்கான வாய்ப்புகளையும் வழங்கினார். இது ஊழியர்களை சிறந்த முறையில் செயல்படுவதை ஊக்குவிக்க உதவியது.

**வரையறுக்கப்பட்ட XYZ கம்பனி** சந்தையில் கடுமையான போட்டியை எதிர்கொண்டது. கம்பனி அளிக்கின்ற தனித்துவமான மதிப்புமிக்க தெரிவுகளில் கவனம் செலுத்துவதன் மூலம் கம்பனியின் உற்பத்திப் பொருள்கள் மற்றும் சேவைகளை வேறுபடுத்த வேண்டியதன் அவசியத்தை சந்தைப்படுத்தல் அணி இனங்கண்டது. அவர்களால் இலக்குவைக்கப்படும் வாடிக்கையாளர்களின் தேவைகள் மற்றும் விருப்பங்களைப் புரிந்து கொள்வதற்காக அவர்கள் சந்தை ஆய்வொன்றை நடத்தியதுடன் அந்தத் தேவைகளை நேரடியாக நிவர்த்தி செய்கின்ற இலக்குப்படுத்தப்பட்ட சந்தைப்படுத்தல் பிரச்சாரங்களையும் உருவாக்கினர்.

சந்தையில் போட்டித்தன்மையுடன் இருப்பதற்காக, கம்பனிக்கு தெளிவான மற்றும் நன்கு வரையறுக்கப்பட்ட தந்திரோபாயம் தேவை என்பதை CEO உணர்ந்து கொண்டுள்ளார். புத்தாக்கங்கள், வாடிக்கையாளர் திருப்தி மற்றும் நிலைபேறான வளர்ச்சி ஆகியவற்றில் கவனம் செலுத்துகின்ற ஒரு தந்திரோபாயத் திட்டத்தை உருவாக்க அவர் நிறைவேற்று அணியினருடன் இணைந்து பணியாற்றினார். திட்டமானது, குறிப்பிட்ட இலக்குகளையும் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான மற்றும் கம்பனி சரியான வழித்தடத்தில் இருப்பதை உறுதி செய்வதற்கான அளவீடுகளையும் உள்ளடக்கியுள்ளது.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) கம்பனியின் தற்போதைய அமைப்பை மாற்றியமைப்பதற்கு புதிய நிறைவேற்று அணி வெளிப்படுத்திய நான்கு (04) தலைமைத்துவப் பண்புகளை (leadership traits) **இனங்காண்க.**

(04 புள்ளிகள்)

(b) தந்திரோபாயத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் தலைமைத்துவம் ஏன் முக்கியமானது என்பதற்கான மூன்று (03) காரணங்களை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(c) **வரையறுக்கப்பட்ட XYZ கம்பனிக்கான** சந்தைப்படுத்தலை இலக்கு வைப்பதன் (targeting in marketing) முக்கியத்துவத்தை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(d) **வரையறுக்கப்பட்ட XYZ கம்பனி** தனது இலக்குகளை அடைவதற்கு, தந்திரோபாயத் திட்டம் எவ்வாறு உதவும் என்பதை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(e) நிறுவனமொன்றின் ஊழியர்களை ஊக்கப்படுத்த ஒரு வெகுமதி நிகழ்ச்சித் திட்டம் எவ்வாறு உதவும் என்பதை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |